

பாடம் 9

நவம்பர் 24 – 30

# ஆணித்தரமான ஆதாரம்

## ஓய்வுநாள் பிற்பகல்

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** *யோவான் 11:51,52; எபேசியர் 2:13-16; 2கொரி 5:17-21; எபேசியர் 4:25-5:2; ரோமர் 14:1-6; அப் 1:14.*

**மனன வசனம்:** இதை அவன் சுயமாய்ச் சொல்லாமல், அந்த வருஷத்துப் பிரதான ஆசாரியனானபடியினாலே இயேசு யூதஜனங்களுக்காக மரிக்கப்போகிறாரென்றும், அந்த ஜனங்களுக்காக மாத்திரமல்ல, சிதறியிருக்கிற தேவனுடைய பிள்ளைகளை ஒன்றாகச் சேர்க்கிறதற்காகவும் மரிக்கப்போகிறாரென்றும், தீர்க்கதரிசனமாய்ச் சொன்னான். யோவான் 11:51,52.

இயேசுவே இரட்சகர் என்பதையும், கடைசிக்கால சத்தியங்களையும் மையமாகக் கொண்டுள்ள நம் செய்திதான் நமக்குள்ளாக ஒற்றுமையை உருவாக்குகிறதெனச் சென்ற வாரம் படித்தோம்.

கிறிஸ்தவர்களின் அன்றாட வாழ்விலும், சபையின் ஊழியப் பணியிலும் ஒற்றுமை எவ்வாறு வெளிப்படுகிறதென இந்த வாரம் பார்ப்போம். இரட்சிப்பின் செய்தியையும், ஒப்புரவாக்குதலின் செய்தியையும் அறிவிப்பதற்காக மட்டுமே தேவன் சபையைத் தெரிந்துகொள்ளவில்லை. அந்த ஒப்புரவாக்குதலை சபை அனுபவித்து, சபையின் ஒற்றுமையில் அது வெளிப்படவேண்டுமென்றும் அவர் விரும்புகிறார். பாவமும் கலகமும் சூழ்ந்துள்ள உலகத்தில், கிறிஸ்துவுடைய இரட்சிப்பின் வல்லமைக்குச் சாட்சியாகச் சபை திகழ்கிறது. சபையின் சாட்சி ஊழியத்தில் ஒற்றுமை இல்லாவிட்டால், கல்வாரியின் இரட்சிப்பு வல்லமையை உலகிற்கு எடுத்துக்காட்ட சபையால் முடியாது. ‘‘கிறிஸ்துவோடு ஐக்கியம் இருந்தால், அது மற்றவர்களோடும் ஐக்கியப் பிணைப்பை உண்டாக்கும். கிறிஸ்துவின் மகத்துவத்தையும் நற்குணத்தையும், பாவத்தைப் போக்கும் அவருடைய வல்லமையையும் உலகிற்குக் காட்டுகிற ஆணித்தரமான ஆதாரமாக இந்த ஐக்கியம் இருக்கிறது.’’ – *EGW, 5SDABC, p 1148.*

*2018*, டிசம்பர் 1 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்



# இயேசுவுடைய சிலுவையின் கீழ்

தேவன் தம் ஜனங்களுக்கு ஆவிக்குரிய ஈவுகள் பல தருகிறார். சபை ஒற்றுமையும்கூட தேவனுடைய ஈவுதான். மனிதருடைய முயற்சியாலும், நற்கிரியைகளாலும், நோக்கங்களாலும் ஒற்றுமை ஏற்படாது. இயேசு கிறிஸ்து தம் மரணம், உயிர்த்தெழுதுதல்மூலம் அந்த ஒற்றுமை உண்டாக்குகிறார். ஞானஸ்நானத்தின்மூலம் இயேசுவின் மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் நாம் ஏற்றுக்கொள்ளும்போது, நாம் ஒரே ஐக்கியத்தில் இணைகிறோம்; முத்தூதை உலகிற்கு அறிவிக்கும்போது, நாம் பிறமனிதர்களோடு ஐக்கியமாகிறோம்.

**கேள்வி: இயேசுவின் வாழ்க்கையில் காணப்பட்ட என்ன விஷயமானது செவந்த்-டே அட்வென்ட்டிஸ்டுகள் மத்தியிலான ஐக்கியத்திற்கு அடித்தளமாக இருக்கிறது? யோவான் 11:51,52; எபேசியர் 1:7-10.**

இயேசுவுக்கு மரணத்தண்டனை விதிக்கும்படி காய்பா சொல்கிறான்; ஆனால், இயேசுவுடைய மரணத்தின் முக்கியத்துவத்தை காய்பாவின் வாயினாலே தேவன் சொல்லவைக்கிறார். தான் சொன்னதில் எவ்வளவு உண்மை இருந்தது என்பதை அந்த ஆசாரியன் உணரவில்லை. அரசாங்கத்தின் சார்பாக, தான் பேசுவதாக காய்பா நினைத்தான். ஆனால் அவன் பேச்சிலிருந்த ஓர் அடிப்படை உண்மையை யோவான் வெளிப்படுத்துகிறார்; அதாவது தேவனை விசுவாசிக்கிற அனைவருக்காகவும் இயேசு பதிலாளியாக மரிக்கவிருந்தார்; ஒருநாளில் அவர்கள் 'ஒன்றாகச் சேர்க்கப்படுவார்கள்.'

செவந்த்-டே அட்வென்ட்டிஸ்டுகளிடம் பல நம்பிக்கைகள் இருக்கலாம்; ஆனால், நம் பதிலாளியாக கிறிஸ்து மரித்தார் என்பதே நம் ஒற்றுமைக்கான அடிப்படையாக இருக்கிறது.

மேலும், இந்த ஒற்றுமையை ஞானஸ்நானத்தின்மூலம் கிறிஸ்துவுக்குள் நாம் அனுபவிக்கிறோம். 'நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும்விசுவாசத்தினால்தேவனுடையபுத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக, ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே.' கலா 3:26,27. ஞானஸ்நானமும் அட்வென்ட்டிஸ்டுகளை ஒன்றாகப் பிணைக்கிறது. ஏனெனில், கிறிஸ்துவின்மேலுள்ள நம் விசுவாசத்திற்கு ஓர் அடையாளமாக அது இருக்கிறது. நமக்கு ஒரு பிதா இருக்கிறார்; நாம் அவருடைய குமாரரும் குமாரத்திகளுமாக இருக்கிறோம். நாம் எல்லாருக்கும் இரட்சகராக இருப்பவரின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலுக்குள்ளாக நாம் ஞானஸ்நானம் பெறுகிறோம். ரோமர் 6:3,4.

செவந்த்–டே அட்வென்ட்டிஸ்டுகள்மத்தியில் கலாச்சார, சமுதாய, இன, அரசியல் வேறுபாடுகள் உள்ளன; ஆனால் இயேசுவின்மேலுள்ள நம் விசுவாசமானது எவ்வாறு அந்த வேற்றுமைகளை எல்லாம் தாண்டி நிற்கவேண்டும்?

திங்கள் நவம்பர் 26



# ஒப்புரவாக்குதலின் ஊழியம்

ஒழுங்கீனம், இக்கட்டுகள், போர்கள், சச்சரவுகள் போன்றவற்றிற்கு இந்த உலகம் பெயர்போனது. தனிப்பட்ட அளவிலும், சமுதாய அளவிலும், தேசிய அளவிலும் இந்தக் காரணிகள் தாக்கம் உண்டாக்குகின்றன. ஆனால், பிரிவினையும் ஒழுங்கீனமும் இறுதிவெற்றி பெறப் போவதில்லை. பிரபஞ்சம்முழுவதிலும் ஒற்றுமை கொண்டுவருகிற வேலையில் தேவன் ஈடுபட்டிருக்கிறார். பாவம் சீரழிவைக் கொண்டுவந்துவிட்டது; ஆனால் ஒப்புரவாக்குதலுக்கான தேவனுடைய நித்திய திட்டமானது சமாதானத்தையும் முழுஇசைவையும் கொண்டுவரும்.

சிலுவையில் இயேசு மரித்ததன்மூலம் யூதர்களையும் புறஜாதியாரையும் ஒன்றாக்கி, அவர்களைப் பிரித்திருந்த பேதங்களை அழித்தார். இப்படியாக விசுவாசிகள்மத்தியில் இயேசு சமாதானம் கொண்டுவருவதாக எபே 2:13-16இல் பவுல் கூறுகிறார். முதல் நூற்றாண்டு யூதர்களுக்கும் புறஜாதியாருக்கும் கிறிஸ்து இதைச் செய்ய முடியுமானால், இன்று நம் சபையில் மக்களைப் பிரித்திருக்கிற இன, நிற, கலாச்சார பேதங்களையும் சுவர்களையும் தகர்த்துப்போட அவரால் முடியாதா?

**கேள்வி: கிறிஸ்துவுக்குள் நாம் புதுச்சிருஷ்டிகளாக இருக்கிறோம்; தேவனோடு ஒப்புரவாக்கப்பட்டிருக்கிறோம். 2கொரி 5:17-21. அப்படியானால் இந்த உலகத்தில் நாம் செய்யவேண்டிய ஊழியம் என்ன? சபையில் ஒற்றுமை காணப்பட்டால் உலகத்தில் நாம் எத்தகைய மாற்றங்களை உண்டுபண்ணமுடியும்?**

புதுச்சிருஷ்டிகளாகிய விசுவாசிகளின் ஊழியம் மேன்மையானது; ஒப்புரவாக்குதலில் சம்பந்தப்பட்ட மூன்றுகட்ட ஊழியம் அது.

**1** விசுவாசிகள் முன்பு தேவனைவிட்டுப்பிரிந்திருந்தார்கள்; இப்போது கிறிஸ்துவினுடைய தியாகத்தின் கிருபையால் ஆவியானவர்மூலம் தேவனோடு ஒப்புரவாக்கப்பட்டுள்ளார்கள். உலகத்திற்கு கடைசிக்காலச் செய்தியை அறிவிக்கும்படி அழைக்கப்பட்டுள்ள மீதமான மக்கள் நாம். தேவனைவிட்டுப் பிரிந்திருப்பவர்களை அவரோடு ஒப்புரவாகவும், நம்மோடு சேர்ந்து ஊழியப்பணி செய்யவும் அழைப்பதுதான் நம் வேலையாகும்.

**2** ஒருவரோடொருவர் ஒப்புரவான தேவ மக்கள் அடங்கியதுதான் சபை. கிறிஸ்துவோடு ஐக்கியமாக இருக்கும்போது நாமும் ஒருவரோடொருவர் ஒற்றுமையுடன் இருப்போம். இது வெறும் லட்சியம் மட்டுமல்ல; நிஜமாக வெளிப்பட வேண்டிய ஓர் உண்மை. சகோதர சகோதரிகளாக நமக்குள் ஒப்புரவும் சமாதானமும் இசைவும் காணப்பட்டால், கிறிஸ்து நம் இரட்சகர் என்பதை உலகிற்கு சந்தேகமின்றி வெளிப்படுத்தலாம். 'நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள்.' யோவான் 13:35.

**3** தேவனுடைய மீட்பின் திட்டம் உண்மையானது என்பதை இந்த ஒப்புரவாக்குதல் ஊழியத்தின்மூலம் சபை இப்பிரபஞ்சத்திற்குச் சாட்சிசொல்லமுடியும். மாபெரும் போராட்டம் தேவனுடைய குணம் சம்பந்தப்பட்டதாகும்.

சபை எவ்வளவுக்கு ஒப்புரவாகுதலுக்காகப் பிரயாசப்படுகிறதோ, அந்த அளவுக்கு தேவனுடைய நித்திய ஞானம் செயல்படுவதை இப்பிரபஞ்சம் காணமுடியும். எபே 3:8–11. எவ்வாறு?

**செவ்வாய்** நவம்பர் 27



# நடைமுறைவாழ்வில் ஒற்றுமை

1902இல் எலன் ஒய்ட் பின்வருமாறு எழுதினார்: ‘கிறிஸ்து இப் பூமியில் எவ்வாறு வாழ்ந்தாரோ, அப்படியே ஒவ்வொரு கிறிஸ்தவனும் வாழவேண்டும். அவர் கறைதிரையற்ற பரிசுத்தத்திலும், பொறுமை யிலும் நற்குணத்திலும் மனஅழகிலும் நமக்கு முன்மாதிரியாக இருக் கிறார்.’ *EGW, ST, July 16, 1902.* பிலிப்பியரிடம் பவுல் வைத்த வேண்டு கோளை இந்த வார்த்தைகள் நினைவூட்டுகின்றன: ‘கிறிஸ்து இயேசு விலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது.’ பிலிப்பியர் 2:5.

**கேள்வி: இயேசுவின்மேல் நாம் மெய்ப்பற்றுடன் இருப்பதை நம் வாழ்க்கையின் என் னென்ன பகுதிகளில் இன்னும் வெளிப்படுத்தலாம்? எபே 4:25-5:2; கொலோ 3:1-17. இயேசுவின் நற்செய்திக்குச் சாட்சிகளாக நாம் எவ்வாறு வாழலாம்?**

கிறிஸ்தவர்கள் இயேசுவின் முன்மாதிரியைப் பின்பற்றி, அவர் கிருபைக்கு உயிருள்ள சாட்சிகளாக வாழவேண்டும்.

1 பிறர் நலனை நாடவேண்டும். மத் 7:12.

2 ஒருவர் பாரத்தை ஒருவர் சுமக்கவேண்டும். கலா 6:2.

3 வெளிப்புற பகட்டு வாழ்க்கையை விட்டுவிட்டு, உள்ளான ஆவிக்குரிய வாழ்வை நாட வேண்டும். மத் 16:24–26; 1பேதுரு 3:3,4.

4 ஆரோக்கியமான வாழ்க்கை முறைகளைப் பின்பற்றவேண்டும். 1கொரி 10:31.

**கேள்வி: கிறிஸ்தவர்கள் உயிருள்ள சாட்சிகளாக வாழவேண்டும் என்பதுபற்றி பேதுரு என்ன சொல்லுகிறார்? 1பேதுரு 2:11,12.**

கிறிஸ்தவ குணத்தைக் கவனிக்கிறவர்கள்மேல் அது தாக்கத்தை உண்டாக்குகிறது; நாம்தாம் அதைக் கவனிப்பதில்லை. எரிச்சலூட்டும் சூழ்நிலைகளில் பொறுமையோடு இருப்பதும், பதற்றமும் சச்சரவுமான சூழலில் ஒழுக்கத்தோடு நடப்பதும், பொறுமையிழந்து சுடுசொற்கள் தெறிக்கும்போது அமைதியான மனநிலையோடு இருப்பதும் நம்மில் காணப்படவேண்டிய இயேசுவின் குணங்களாகும்.

தேவனுடைய குணத்தைத் தவறாகப் புரிந்திருக்கும் உலகில் செவந்த்-டே அட்வென்ட்டிஸ்டுகள் இத்தகைய சாட்சிகளாக வாழும் போது, நன்மை உண்டாகும்; அவ்வாழ்க்கை தேவ மகிமைக்கேதுவாக விளங்கும். கிறிஸ்துவின் பிரதிநிதிகள் ஒழுக்கமுள்ளவர்களாக வாழ்ந் தால் மட்டும் போதாது; பிறர் நலனிலும் அக்கறைகாட்டவேண்டும். நம் ஆவிக்குரிய வாழ்க்கை உண்மையானதாக இருந்தால் அது இவ்வுலகத்தில் ஒரு தாக்கத்தை உண்டாக்கும். விசுவாசிகள் ஒற்றுமை யுள்ளவர்களாக, கிறிஸ்துவின் குணத்தை வெளிப்படுத்தும்போது, நம் சாட்சி வல்லமையானதாக இருக்கும்.

நீங்கள் மற்றவர்களுக்கு எப்படிப்பட்ட சாட்சிகளாக இருக்கிறீர்கள்? உங்களுடைய வாழ்க்கையில் காணப்படும் என்ன விஷயம், இயேசுவைப் பின்பற்ற வேண்டுமென்கிற ஆர்வத்தை மற்றவர்களில் உண்டாக்கக்கூடும்?



# வேற்றுமையில் ஒற்றுமை

ரோம் சபையில் பிளவை உண்டாக்கின பிரச்சனைகளை ரோமர் 14,15 அதிகாரங்களில் பவுல் கூறுகிறார். ஒருவர்மேல் ஒருவர் பொறுமையோடு நடக்கும்படியும் இந்தப் பிரச்சனைகளை வைத்து, சபையில் பிரிவினையை உண்டாக்காமல் இருக்கும்படியும் கூறுகிறார்.

**கேள்வி: ரோம் விசுவாசிகள் ஒருவரையொருவர் குறைசொல்லி, ஒற்றுமையில்லாமல் இருந்தார்கள்; மனச்சாட்சி சம்பந்தப்பட்ட பிரச்சனைகளே அதற்குக் காரணம். அவை யாவை? ரோமர் 14:1-6.**

யூத சடங்காச்சாரத்தின்படி அசுத்தமான ஏதோ ஒன்றைச் செய்ததால், பிரச்சனை எழுந்திருக்கலாம். ‘***மன ஐயங்கள்***’ தொடர்பான பிரச்சனைகள் என்று பவுல் கூறுகிறார். ரோமர் 14:1. இவை இரட்சிப்போடு சம்பந்தப்பட்ட விஷயங்கள் அல்ல; தனிமனிதரின் கருத்துகள் சம்பந்தப்பட்டவை; எனவே, அவரவர் மனச்சாட்சியின்படி செய்ய விட்டுவிட வேண்டும் என்கிறார். ரோமர் 14:5.

புசிக்கிற உணவு சம்பந்தமாகப் பிரச்சனைகள் எழுந்திருந்தன. லேவி 11 தடைசெய்கிற மிருகங்களைப் புசித்ததால் பவுல் கண்டித்தார் என்பதற்கு ஆதாரமில்லை. பவுலின் நாட்களில் கிறிஸ்தவர்கள் யாரும் தீட்டான மிருகங்களைப் புசிக்கவில்லை. அப் 10:14. பெலவீனன் மரக்கறிகளைப் புசித்தது போன்ற பிரச்சனைகள் பேசப்படுவதால், இது சடங்காச்சாரத் தீட்டு சம்பந்தப்பட்ட விஷயம்தான். ரோமர் 14:2. ரோமர் 14:14இல் தீட்டு (கொய்னோஸ்) என்கிற வார்த்தை வருவதிலிருந்து இது தெளிவாகிறது. பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பில் தீட்டான மிருகங்களைச் சுட்டிக்காட்ட இந்த வார்த்தை வருகிறது; லேவி 11இன் அசுத்த மிருகங்களைச் சுட்டிக்காட்ட இந்த வார்த்தை வரவில்லை. ரோம்சபையிலிருந்த சிலர் விருந்துகளில் கலந்துகொள்ளவில்லை; உணவு சடங்காச்சார ஒழுங்குடன் சமைக்கவில்லை; விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டிருந்தன என்று அவர்கள் நினைத்தார்கள்.

நாட்களை விசேஷிப்பதும் அப்படித்தான். வாராந்தர ஓய்வுநாளை பவுல் இங்குக் குறிப்பிடவில்லை. ஏனென்றால், அவரே அதை ஆசரித்தார். அப் 13:14; 16:13; 17:2. யூத பண்டிகை நாட்கள், அல்லது உபவாச நாட்களை அவர் குறிப்பிட்டிருக்கலாம். சிலர் தங்கள் மனச்சாட்சியின்படி சில நாட்களை விசேஷமாக நினைத்திருக்கலாம், அவற்றை இரட்சிப்புக்கான வழிகளாக அவர்கள் எண்ணாதிருந்தால், அவர்களைச் சகித்துக்கொள்ளும்படி பவுல் வலியுறுத்துகிறார். கருத்து வேற்றுமைகள் வரலாம்; விசுவாசத்திற்குப் பங்கம் விளைவிக்காத பட்சத்தில் பொறுமையோடும் சகிப்புத்தன்மையோடும் நடப்பதுதான் கிறிஸ்தவர்கள் மத்தியில் ஒற்றுமையைக் கொண்டுவரும்.

அட்வென்ட்டிஸ்டுகள் கடைப்பிடிக்க அவசியமில்லாத ஏதாவது பழக்கவழக்கங்களை நாம் கடைப்பிடிக்கிறோமா? அட்வென்ட்டிஸ்டுகள் விசுவாசிக்க அவசியமில்லாத ஏதாவது ஒன்றை நம்புகிறோமா?



வியாழன் நவம்பர் 29

# ஊழியப்பணியில் ஒற்றுமை

**கேள்வி: கடைசி இராப்போஜனத்தின்போது சீடர்களிடம் காணப்பட்ட மனநிலையையும் (லூக் 22:24), பெந்தெகொஸ்தே அனுபவத்திற்குச் சற்றுமுன் அவர்களிடம் காணப் பட்ட மனநிலையையும் (அப் 1:14; 2:1,46) ஒப்பிடுங்கள். அவர்களுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட இந்த மாற்றத்திற்கான காரணம் என்ன?**

அப் 1:14லும் 2:46லும் வருகிற **'ஒருமனம்'** என்கிற சொல்லுக்கு **'ஒரே மனதுடன் நிலைத்திருத்தல்'** என்றும் அர்த்தங்கூறலாம். தேற்றரவாளனை அனுப்புவதாக இயேசு வாக்குரைத்திருந்தார்; அது நிறைவேறும்படி அவர்கள் ஒரே இடத்தில் கூடி ஜெபித்ததால், ஒருமனதைப் பெற்றார்கள்.

அவர்கள் காத்திருந்த சமயத்தில் ஒருவரை ஒருவர் விமர்சிக்க வாய்ப்பு இருந்தது. இயேசுவை பேதுரு மறுதலித்ததையும், இயேசுவின் உயிர்த்தெழுதலை தோமா சந்தேகித்ததையும்சுட்டிக்காட்டியிருக்கலாம். இயேசுவின் ராஜ்யத்தில் யோவானும் யாக்கோபும் பதவிக்கு ஆசைப் பட்டது அவர்களுடைய நினைவுக்கு வந்திருக்கலாம். மத்தேயு முன்பு ஆயக்காரனாக இருந்ததை நினைத்து வெறுப்படைந்திருக்கலாம். யோவான் 18:15-18,25-27; 20:25; மாற்கு 10:35-41; மத்தேயு 9:9.

ஆனால், 'அந்த ஆயத்தநாட்களில் தங்கள் இருதயங்களை ஆராய்ந்துபார்த்தார்கள். தங்கள் ஆவிக்குரிய தேவையை சீடர்கள் உணர்ந்தார்கள்; ஆத்தும ஆதாய ஊழியத்திற்கு தங்களைத் தகுதிப்படுத்தும் பரிசுத்த அபிஷேகத்திற்காக ஆண்டவரிடம் கதறினார்கள். தங்களுடைய ஆசீர்வாதத்திற்காக எதையும் கேட்கவில்லை. ஆத்துமாக்களின் இரட்சிப்பு குறித்து பாரமடைந்திருந்தார்கள். நற்செய்தியை உலகத்திற்கு அறிவிக்கவேண்டியதை உணர்ந்து, கிறிஸ்து வாக்களித்திருந்த வல்லமையை வேண்டினார்கள்.' - *EGW, AA, p 37.*

சீடர்கள் மத்தியில் காணப்பட்ட ஒற்றுமையும், அதற்காக ஜெபித்த ஜெபமும்தான் பெந்தெகொஸ்தே அனுபவத்திற்கு அவர்களை வழி நடத்தியது. சீடர்கள் தங்களுடைய கருத்து வேறுபாடுகளை ஒதுக்கி விட்டு, தேவனிடம் நெருங்கிச்சென்றபோது, இயேசுவின் உயிர்த்தெழுதலைக் குறித்துச் சாட்சிசொல்லும்படி ஆவியானவர் அவர்களை ஆயத்தப்படுத்தினார். இயேசு தங்கள் வாழ்க்கையில் செய்திருந்த மாற்றத்தை உணர்ந்திருந்தார்கள். அவருக்குள் இரட்சிப்பின் வாக்குத்தத்தம் உண்டென்பதை நம்பினார்கள்; எனவே 'கிறிஸ்துவின் குணத்தை தங்களில் வெளிப்படுத்துவதும், ராஜ்யத்தின் விரிவாக்கப் பணிக்காகப் பிரயாசப்படுவதுமே விசுவாசிகளின் ஆர்வமாக இருந்தது.' - பக்கம் 48. அவர்கள்மூலமாக ஆண்டவர் வல்லமையாகக் கிரியைசெய்தார். இன்றைய சபைக்கு மகத்தான பாடம் அதில் உள்ளது.

மற்றவர்களுடைய வாழ்க்கையில் தவறுகண்டுபிடிப்பது எளிது. 'சபையில் ஒற்றுமை வேண்டும், தேவனுடைய சித்தத்தைமட்டுமே செய்யவேண்டும், எனவே, மற்றவர்களின் தவறுகளை நான் பார்க்கப்போவதில்லை' என்று வாழ்வதற்கு நாம் என்ன செய்யலாம்?



## மேலும் படிக்க:

கிறிஸ்துவுக்குள் ஒற்றுமையாயிருந்த ஆரம்ப காலச் சபையானது, தங்களுக்குள் வேற்றுமைகள் இருந்தாலும் ஒற்றுமையை வளர்த்து, உலகிற்கு வல்லமையான சாட்சியாகத் திகழமுடிந்தது. "ஆரம்பக்காலச் சபையில், முடிவெடுக்கும் செயல்பாடுகளில் ஆவியானவர் வழிநடத்தினார். ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்ட மூன்று விதங்களில் இந்தச் செயல்பாடு அமைந்தது:

1. வெளிப்பாடுகள் (உதாரணம், மக்களிடம் ஆவியானவர் பேசினார்; கொர்நெலியு, அனனியா, பிலிப்பு; சீட்டுப்போட்டும் முடிவெடுத்திருக்கலாம்).
2. வேதாதமம் (வேதவசனங்களை வைத்தும் சபை தீர்மானம்செய்தது).
3. ஒருமனம் (மக்கள்மத்தியில் நுணுக்கமான விதத்தில் ஆவியானவர் கிரியைசெய்தார்; பேச்சுவார்த்தை, ஆராய்ச்சிமூலம் அவர்களுக்குள் ஒரு மனம் உண்டானது; முடிவில், ஆவியானவர் தங்களுக்குள் கிரியைசெய்வதை சபையார் உணர்ந்துகொண்டார்கள்).

விசுவாசக் குடும்பத்தார் மத்தியில் கலாச்சாரம், கோட்பாடு, இறையியல் சம்பந்தமாக சர்ச்சைகள் எழுந்தபோது, அவர்கள் ஒருமனதோடு முடிவு எடுக்கும்படி ஆவியானவர் செயல்பட்டார். இத்தகைய செயல்பாடுகளில் சபைத்தலைவர்கள் மட்டுமல்ல, விசுவாசக்குடும்பத்தாரும் ஆர்வத்தோடு பங்கெடுத்தார்கள்; சரியான தீர்மானத்திற்கு வருவதற்காக ஜெபித்தார்கள். விசுவாசக் குடும்பத்தார் தேவ வார்த்தைகளைப் புரிந்தகொண்ட சமயங்களிலும், தலைவர்களின் ஊழியங்களிலும் ஆவியானவரே வழிநடத்தினார். சபையின் தீர்மானங்கள் ஒவ்வொன்றுமே பரிசுத்த ஆவியானவருடையநடத்துதலின்படி எடுக்கப்பட்டன; அவற்றில் வேதாகமும் ஜெபமும் இன்றியமையாத ஆவிக்குரிய காரணிகளாக இடம்பெற்றிருந்தன.

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *புதன்கிழமை கேட்கப்பட்ட கடைசிக் கேள்வியை மீண்டும் தியானியுங்கள்; செவந்த்-டே அட்வென்டிஸ்டுகள் கண்டிப்பாகப் பின்பற்றவேண்டிய போதனைகளும் பழக்கவழக்கங்களும் யாவை? அவ்வாறு பின்பற்ற அவசியமில்லாதவை யாவை?*
2. *இயேசுவின் மரணத்தையும் உயிர்த்தெழுதலையும்குறித்து நம்மைப்போலவே நம்புகிற பிற சபைகளின் கிறிஸ்தவர்களை நாம் எவ்வாறு பார்க்கவேண்டும்?*

**பாடச்சுருக்கம்:** **இயேசுவைப்போல சகோதர சகோதரிகள் ஒருவருக்கொருவர் அன்புள்ளவர்களாக இருப்பதுதான் ஒற்றுமைக்கான ஆணித்தரமான ஆதாரமாகும். நம் பாவங்கள் மன்னிக்கப்படுவதும், நம் எல்லாருக்குமே இரட்சிப்பு தேவைப்படுவதும்தான் அட்வென்ட்டிஸ்டுகளாகிய நம்மை இணைக்கிற பெலமிக்க இணைப்புகள் ஆகும். நாம் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் நம்முடைய ஒற்றுமைகுறித்தும், நம்மிடையே பொதுவாகக் காணப்படும் விசுவாசம்குறித்தும் உலகத்திற்கு நாம் சாட்சிப்பகரமுடியும். இதற்காகத்தான் நாம் அழைக்கப்பட்டும் இருக்கிறோம்.**

# அன்புதான் சிறந்த மருந்து

**ஆண்ட்ரூ மக்செஸ்னீ, அட்வெண்டிஸ்ட் ஊழியம்**

காசநோய் பாதிப்பால் மலாவியில் உள்ள ப்ளான்டயர் அட்வென்ட்டிஸ்ட் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார் 30 வயது மதிக்கத்தக்க ஒரு பெண்மணி. மருந்துகள் கொடுத்தும் நோய் குணமாகாததால் எச்ஐவி பரிசோதனை செய்யும்படி ஊழியப்பணியாளரான மருத்துவர் டிஃபானி பிரீஸ்டர் கூறினார். எய்ட்ஸ் இருப்பது உறுதியானது.

"காசநோய்க்கு மூன்று வாரங்கள் சிகிச்சைகொடுக்கப்போம்; அந்தப் பெண்மணி பிழைப்பதற்கு 50 சதவிகித வாய்ப்புள்ளது" என்று பிரீஸ்டர் அந்தக் குடும்பத்தினரிடம் கூறினார். ஆனால் சிறுநீரகப் பிரச்சனையும் உண்டானதால், பிழைப்பதற்கான வாய்ப்பு 10 சதவிகிதமாகக் குறைந்தது. "பிழைப்பது கஷ்டம்தான்" என்று பிரீஸ்டர் கூறினார். "நாங்கள் தேவனை நம்புகிறவர்கள். அற்புதங்களில் எங்களுக்கு நம்பிக்கை உண்டு. நாம் ஜெபிப்போம்" என்று குடும்ப அங்கத்தினர் ஒருவர் கூறினார்.

குடும்பத்தினர் சுற்றிலும் நிற்க, அந்த நோயாளி குணமாக வேண்டுமென்று பிரீஸ்டர் ஜெபித்தார்; பிறகு உயிர்காப்புச் சாதனங்களை நோயாளிக்கு மாட்டிவிட்டார். அடுத்த 24 மணி நேரத்தில் சிறுநீரகம் செயலிழந்தது. இனி அவ்வளவுதான் என்று எல்லாரும் நினைத்தார்கள். ஒரு சில வாரங்கள் கழித்து, அந்தப் பெண் முற்றிலும் குணமானார். "மருந்துகளுக்கு ஓர் எல்லை இருக்கிறது. மருத்துவமனையில் எங்களால் இயன்றதைச் செய்தோம், மற்றதை தேவன் பார்த்துக்கொண்டார்" என்கிறார் பிரீஸ்டர்.

மலாவியில் உள்ள நகரம் ப்ளான்டயர்; மக்கள் தொகை சுமார் 10 லட்சம். அங்கு 5 வருடங்களுக்கு மேலாக இதய சிறப்பு மருத்துவராக பணியாற்றுகிறார் பிரீஸ்டர்.

ஒரு நாள் மலாவியைச் சேர்ந்த ஒரு பெண்மணி பிரீஸ்டரிடம் வந்து, தினமும் நடு ராத்திரியில் தனக்கு படபடப்பு உண்டாவதாகச் சொன்னார். மருத்துவ பரிசோதனை முடிவுகள் நன்றாகத்தான் இருந்தன. அவளிடம் பேசும்படி பிரீஸ்டரை ஆவியானவர் உணர்த்தினார். விசாரித்தபோது, தன்னை தீர்க்கதரிசியெனச் சொல்லிக்கொண்ட ஒருவர் அவளிடம், நடுராத்திரியில் யாரோ ஒருவர் அவளை பலாத்காரம் செய்யப்போவதாகச் சொன்னாராம். "தேவன் பெலசாலியா, அந்த மனிதனா? தேவனை நம்பு" என்று பிரீஸ்டர் சொன்னார். உடனே, "தேவன்தாம் பெலசாலி என்று சொன்ன முதல் மருத்துவர் நீங்கள்தாம்" என்று அந்தப் பெண் சந்தோஷப்பட்டாள். 'ஒருவரிலொருவர் அன்பாயிருப்பது' என்றால், இதுதான். சரீர—உணர்வுரீதியான—ஆவிக்குரிய சுகம் உண்டாக நம்மால் இயன்றதைச் செய்யவேண்டும்.



**'சிலசமயங்களில், சிறுசிறு விஷயங்கள்தாம் நம்மை வேறுபடுத்திக் காட்டுகின்றன' என்கிறார்.**